2019 பிப்ரவரி 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

21 தடுப்பணைகளின் பழுதுபார்ப்பு மற்றும் மறுகட்டமைப்புப் பணிகளை உடனடியாக நிறுத்தக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், மனு ஒன்றை 19–11–2018 அன்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ளது.

ஆந்திர அரசு, பாலாற்றின் குறுக்கே மேலும் 30 புதிய தடுப்பணைகளைக் கட்ட உத்தேசித்திருப்பதாக 5–2–2019 அன்று செய்தி வந்ததையடுத்து, இத்தடுப்பணைகள் கட்டுவதற்கான அனுமதியை வழங்கக் கூடாது எனவும், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையில் தடுப்பணைகள் கட்டப்படக் கூடாது எனவும், அவ்வரசின் நீர்வள ஆதாரத் துறைக்கு அறிவுரை வழங்குமாறு 6–2–2019 அன்று ஆந்திர அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பாலாறு நதிநீர்ப் பிரச்சினையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மிக உன்னிப்புடனும், கவனத்துடனும், சட்டரீதியாகவும் பிரச்சினையை தொடர்ந்து அணுகி வருகிறது என்றும், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கொடைக்கானல் நகராட்சி, மறு ஆய்வு முழுமைத் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள், நேற்றைக்கு இந்த அவையில் எழுப்பிய ஒரு சின்ன பிரச்சினைக்கு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு விளக்கம் அளிக்கவுள்ளார்கள். (குறுக்கீடு) அவர் நேற்றைக்கே பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில், சர்வதேச சுற்றுலாத் தலமாக இருக்கக்கூடிய கொடைக்கானல் நகரப் பகுதியைப் பொறுத்தவரையில், 1993 ஆம் ஆண்டு ஒரு முழுமைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அந்த முழுமைத் திட்டம் அறிவிக்கப்பட்ட ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, அங்கிருக்கக்கூடிய காலச்*

[திரு. ஐ.பி. செந்தில்குமார்] [*2019 பிப்ரவரி 12*

சூழ்நிலைகளுக்கும், மக்கள் வாழ்நிலைகளுக்கும் ஏற்றவகையில், ஒவ்வோர் ஐந்தாண்டுகளுக்கும் ஒருமுறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு, இத்திட்டம் ஆரம்பித்து கிட்டத்தட்ட 26 ஆண்டுக்காலம் நிறைவுற்றிருக்கக்கூடிய நிலையில், ஒரு புதிய முழுமைத் திட்டம் இல்லாத நிலையில், அதற்குப் பிறகு பல கட்டடங்கள் கட்டப்பட்டு, அந்தக் கட்டடங்கள் விதிமீறல்களுக்கு உள்ளாகியிருப்பதாக ஒரு சூழ்நிலை உருவாகி, மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல், ஆணையர், கொடைக்கானல் நகராட்சி ஆகியோர் மூலமாக கிட்டத்தட்ட 1,460–க்கும் மேற்பட்ட கட்டடங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு, இன்றைக்கு அந்தக் கட்டடங்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அங்கு பாதிப்பிற்குள்ளாகியுள்ள மக்கள் அனைவரையும் இந்த நிலையிலிருந்து சட்ட ரீதியாகக் காப்பதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன். குறிப்பாக, கடந்த 22–1–2017 ஆம் நாள் முதல் 21–6–2019 ஆம் நாள் வரை ஒருமுறை கட்டட வரைமுறை செய்யப்படும் என்று விதி 110–ன்கீழ் இந்த அவையில் அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த அறிவிப்பில் மலைப் பிரதேசங்கள் விடுபட்டுள்ளன. அதில் கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களையும் இணைத்துக்கொண்டால், விதிமீறல்களுக்கு உள்ளாகியுள்ள அந்தக் கட்டடங்கள் பாதுகாக்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகும். எனவே, அதற்கான முயற்சியை இந்த அரசு மேற்கொள்ள முன்வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு துணை முதலமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமருங்கள் என்று சொன்னால், நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்களே!*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *இது முக்கியமான விஷயம். இரண்டே இரண்டு* points*–தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அவையில் நாம் பேசுவது எல்லாமே முக்கியமான விஷயங்கள்தான்.* Zero hour*–ல் நீங்கள் கவனத்தை ஈர்த்து மட்டும்தான் பேச வேண்டும்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *இரண்டே இரண்டு* points*–தான். முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இவ்வாறு விரிவாகப் பேசினால் எனக்கு நேரமிருக்காது. இதனால் மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர முடிவதில்லை.*

2019 பிப்ரவரி 12]

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *இரண்டே இரண்டு நிமிடங்கள்,* please.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு நிமிடங்கள் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் இப்படியே எல்லோருக்கும் சொல்லிக் கொண்டேயிருந்தால், நான் எப்படி அவை அலுவல்களை முடிக்க முடியும்? (குறுக்கீடு) உரையை முடிப்பதற்கும் ஒத்துழைக்க மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார், உங்களை நேற்றைக்கே பேச அனுமதித்து, இன்றைக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்றுதான் சொன்னேன்.*

முற்பகல் 11–25

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *விதிமீறல்களுக்குட்பட்ட கட்டடங்களுக்கு ஒரு முறை கட்டட வரையறை செய்வதற்குரிய வழிவகையை உருவாக்குவதற்கும், புதிய முழுமைத் திட்டத்தை* (Master Plan) *உருவாக்குவதற்கும் இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கான முதலாம் முழுமைத் திட்டம் 4–3–1993–லிருந்து அமலில் உள்ளது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, (தமிழ்நாடு சட்டம் 35/1972) முழுமைத் திட்டம் தயாரித்தல் மற்றும் ஒப்புதல் அளிக்கும் முறையை அது வகுத்திருந்தது. முழுமைத் திட்டங்கள், சட்டப் பிரிவுகள் 16, 17, 24, 26, 28–ன்படி தயாரிக்கப்பட்டு, இணக்கம் அளிக்கப்பட்டு மக்கள் கருத்து கேட்கப்பட்டு, அது பரிசீலிக்கப்பட்டு பின்னர் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அமல்படுத்தப்படுகின்றன. சட்டப் பிரிவு, 32–ன்கீழ் முழுமைத் திட்டத்தில் தேவைப்பட்டால் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மறு ஆய்வு செய்து, மாறுதல் செய்யலாம். மறு ஆய்வு செய்வதற்கு முழுமைத் திட்டம் தயாரிக்கும் அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். மேலும், 5 ஆண்டுகள் முடிந்தவுடன் மறு ஆய்வு செய்வதற்கு நீண்ட நடைமுறை பின்பற்றப்பட வேண்டியுள்ளது. கொடைக்கானல்*

மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு அரசின் இணக்கம் பெற உள்ளூர் திட்டக் குழுமம் 22–3–2011–ல் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பியது. மறு ஆய்வு முழுமைத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, 7–4–2015 மற்றும் 30–7–2016–ல் நடந்த கூட்டங்களில் விரிவாக விவாதித்து, வரைவு மறு ஆய்வு முழுமைத் திட்டத்தை 2–9–2016 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது. அரசு, 21–9–2016–ல் வரைவு மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு இணக்கம் அளித்து, பொதுமக்களுடைய ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகளைப் பெறுவதற்காக 21–9–2016 அன்று அன்றைய நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. குறிப்பிட்ட காலமான 60 நாட்களுக்குள் 109 ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டன. இந்தக் காலக்கட்டத்திற்குப் பின்னரும் 10 ஆட்சேபணைகள் பெறப்பட்டன. அவற்றின்மீது உரிய பரிந்துரைகளுடன் உள்ளூர் திட்டக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் வழியாக அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசு, வரைவு மறு ஆய்வு முழுமைத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, 2–3–2018–ல் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி ஆட்சேபணைகளின்மீது விரிவான அறிக்கையை உள்ளூர் திட்டக் குழுமத்திடம் கேட்டுள்ளது. கொடைக்கானல் நகரில் சில கட்டடங்கள் அனுமதியற்று அல்லது அனுமதி மீறி கட்டப்பட்டுள்ளன. இதற்கிடையே சென்னை உயர் நீதிமன்றம் பொது நல வழக்கு ஒன்றில் நீதிப் பேராணை எண் 268/2004–ல் எல்லாவிதமான விதிமீறல் கட்டடங்கள்மீதும் உரிய அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது. கொடைக்கானல் நகரப் பகுதிகளில் 2003–லிருந்து விதி மீறி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு நகரமைப்புச் சட்டம் மற்றும் நகராட்சிச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது. இவற்றில் சிலர் அரசுக்கு மேல்முறையீடு செய்தனர், பலர் மேல்முறையீடு செய்யவில்லை. விதி மீறியிருந்த காரணத்தினால் அரசு மேல்முறையீட்டு மனுக்களை நிராகரித்தது. அதனால் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள். கொடைக்கானல் நகரில் 2007 ஆம் ஆண்டு வரை 1,415 அனுமதியற்ற கட்டடங்களும், அதன் பின்னர் 81 அனுமதியற்ற கட்டடங்களும், ஆக மொத்தம், 1,496 அனுமதியற்ற கட்டடங்கள் உள்ளன. இவற்றில் 1,221 குடியிருப்புக் கட்டடங்களும், 233 வணிகக் கட்டடங்களும், 29 அலுவலகக் கட்டடங்களும், 9 வழிபாட்டுக் கட்டடங்களும், 4 ஆக்கிரமிப்புக் கட்டடங்களும் உள்ளன. மேற்கூறிய கட்டடங்களில் சில கட்டடங்கள் விதி மீறிய கட்டடங்களாகவும், சில கட்டடங்கள் விதிகளுக்குட்பட்டு அனுமதிக்கத்தக்க வகையிலும் உள்ளன. இதன்

2019 பிப்ரவரி 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முழு விவரங்கள் குறித்து தற்போது கள ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. கட்டட அனுமதி மறுக்கப்பட்டவர்களும், ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினரும், கொடைக்கானல் மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால் அவர்களுடைய கட்டடங்கள் விதிமுறைகளுக்குட்படும் எனக் கருதி மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் அளிக்கக் கோரி மதுரை கிளை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இவ்வழக்கு, உயர் நீதிமன்றத்தில் கொடைக்கானல் நகரில் விதி மீறி கட்டிய கட்டட உரிமையாளர்கள் தொடர்ந்த 58 வழக்குகளையும் ஒன்றிணைத்து நீதிப் பேராணை எண் 914/2018–ன்கீழ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அவர்கள் 6–12–2018 அன்று நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி 3 மாதத்திற்குள் மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்கள். நீதிமன்றத்தில், மறு ஆய்வு முழுமைத் திட்டம் அமலுக்கு வரும்வரை அமலாக்க நடவடிக்கையை நிறுத்தி வைக்கலாமா என்று வாய்மொழியாகக் கேட்கப்பட்டது.

முற்பகல் 11–30

இதுகுறித்து, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யுமாறு, நீதிமன்றத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி 58 அனுமதியற்ற கட்டுமானங்கள் விதிகளைப் பூர்த்தி செய்யாது என்று நகராட்சி நிருவாக முதன்மைச் செயலாளர் அவர்கள் சார்பில் 19–12–2018 அன்று நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம் 23–1–2019 அன்று 45 அனுமதியற்ற கட்டடங்களுக்கும் மின் இணைப்பைத் துண்டிப்பு செய்து, 25–1–2019 அன்று அறிக்கை தாக்கல் செய்ய கோட்டப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிக்கு உத்தரவிட்டது. 25–1–2019 அன்று மின் இணைப்பைத் துண்டிப்பு செய்த விவரம் உயர் நீதிமன்றத்தில் அறிக்கையாகத் தாக்கல் செய்யப்பட்டது. இவ்விவர அறிக்கையை, 28–1–2019 அன்று விசாரித்த உயர் நீதிமன்றம் 45 அனுமதியற்ற கட்டுமானங்களையும் பூட்டி, முத்திரையிட்டு 31–1–2019 அன்று அறிக்கையாகத் தாக்கல் செய்ய உத்தரவிட்டது. 31–1–2019 அன்று இவ்விவரங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் பரிசீலித்த நிலையில், வழக்கில் ஆஜரான வழக்கறிஞர்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 பிப்ரவரி 12

கொடைக்கானல் நகரில் 2007 முதல் அறிவிப்பு வழங்கப்பட்ட கட்டடங்கள் 1,415 உள்ளதாகவும், 45 கட்டடங்கள்மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இதனை விசாரித்த நீதிமன்றம் அனைத்து அனுமதியற்ற கட்டடங்கள்மீதும் உரிய முறையில் ஆய்வு செய்து, சட்டரீதியான முடிவுகள் மேற்கொண்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுத்து 11–3–2019 அன்று அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் கொடைக்கானல் மறு ஆய்வு முழுமைத் திட்டம் 1–2–2019–ல் நடந்த சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, பொதுமக்களின் ஆட்சேபணைகள் பரிசீலிக்கப்பட்டு, இறுதி செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. எனவே, நீதிமன்றத்தில் அரசு அளித்த உறுதியின்படி மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு, Master Plan 6–3–2019–க்குள் ஒப்புதல் அளிக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொடைக்கானல் நகர் மலை வாழிடமாக உள்ளதாலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், விதிமீறல்களை ஆராய்ந்து, மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த பின்னர் விதி மீறிய கட்டடங்களை எவ்வாறு நெறிப்படுத்துவது என்பது குறித்து சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் மற்றும் துறைகளின் ஆலோசனை பெறப்பட்டு முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையில், முடிவெடுக்கப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சிலபல ஆலோசனைகளும் கருத்தில்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈமச் சடங்கு நிதி முறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஈமச் சடங்கு நிதி சரியாகப் போய்ச் சேரவில்லையென்ற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். அதற்கு விளக்கத்தைத் தர விரும்புகிறேன்.